**செ.வெ.எண்:69** **நாள். 26.10.2019**

## கரூர் மாவட்டத்தில் பயன்பாடற்ற ஆபத்தான ஆழ்துளை கிணறுகளை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் உடனே மூட வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் எச்சரிக்கை.

கரூர் மாவட்டத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான நிலங்கள் / விவசாய நிலங்கள் / நகராட்சி / பேரூராட்சி / ஊரக பகுதி மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களில் பயன்பாடற்ற ஆபத்தான நிலையில் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் பாசனத்திற்கு பயன்படுத்தப்படாத திறந்த வெளி தூர்ந்துபோன கிணறுகள் இருப்பின் பொது மக்கள் அதனை உடனே சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். பயனற்ற ஆழ்துளை கிணறு மற்றும் திறந்த வெளி தூர்ந்து போன கிணறுகளை சமந்தப்பட்ட நில உரிமையாளர்கள் உடனே மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், வருவாய்த்துறை அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள் இணைந்து ஆய்வு மேற்கொண்டு மூடப்படாமல் இருக்கும் பயனற்ற ஆபத்தான நிலையில் இருக்கும் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி தூர்ந்துபோன கிணறுகளை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு மூடப்படாமல் ஆபத்தான நிலையில் உள்ள பயன்பாடற்ற கிணறுகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**வெளியிடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.